கூட்டுறவே நாட்டுயர்வு

# சங்கம் செய்தி

**கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்**

**ஜனநாயக ஆளுமையும் சமூக மேம்பாடும்**

ஒக்ரோபர் 2007 தொலைபேசி இலக்கம் : 021 226 3263, 4474, 4725 செய்தி : 05

தொலைநகல் : 021 226 3263



ஜனன தினம்
அக் - 02


## மகாத்மாகாந்தி

### வாழ்க்கைக் குறிப்புகள் :

மகாத்மாகாந்தி 1869ம் ஆண்டு அக்ரோபர் மாதம் 02ம் நாள் சனிக்கிழமை இந்தியா விலுள்ள குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னுமிடத்தில் பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் கரம்சந்காந்தி, தாயார் பெயர் புத்திலிபாய்.

தந்தையாரும் பாட்டனாரும் போர்பந்தர் இராசகோட்டை என்னுமிடத்தில் அமைச்சர்களாக இருந்து கடமையாற்றியவர்கள். பெற்றோர்கள் நடத்திவைத்தபடி காந்தயின் 13வது வயதில் திருமணம் நடந்தேறியது. திருமணம் நடந்து முடிந்தது ஒருபுறம் இருக்க அவர் உயர்நிலைப் பள்ளியில் படிப்பை தொடர்ந்தார். இவர் இங்கிலாந்தில் கல்வி கற்பதை விரும்பினார். வறுமையாலும் வைதீக கட்டுப்பாட்டை பேண வேண்டியதாலும் பெற்றோர் இவர் இங்கிலாந்து செல்வதை விரும்பவில்லை. ஆயினும் கரம்சந்காந்தியின் பிராமண நண்பரான மால்ஜிதவே என்பவரின் ஆலோசனையின்பேரில் இங்கிலாந்துக்கு கல்விகற்க பெற்றோர் சம்மதம் தெரிவித்தனர். இங்கிலாந்து போக முன் ஜைனதுறவி பேச்சர்ஜி சுவாமி முன்னிலையில் மது, மாது, மாமிசம் மூன்றையும் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டேன் என்று தாயாருக்கு சத்தியம் செய்து கொடுத்தார். 1888 செப்ரெம்பர் 4ம் நாள் பம்பாயிலிருந்து இங்கிலாந்துக்கு கல்வி கற்பதற்காக பயணமானார். இங்கிலாந்தில் மற்றிகுலேசன் பரீட்சையில் சித்தியெய்தினார். பரிஸ்டரர் பட்டத்திற்கு படித்தார். இக்காலத்தில் தாயார் இறந்துவிட்டார். இச்செய்தியால் அவரது கல்வி பாதிக்கப்படும் என்பதற்காக அவருக்கு மரணச்செய்தி அறிவிக்கப்படவில்லை. பரிஸ்டர் பட்டம் பெற்றார். 1891ம் ஆண்டு யூன் திங்கள் 10ம் நாள் வழக்கறிஞர் மன்றத்தில் பதிவுசெய்ய அனுமதி கிடைத்தது. மறுநாள் உயர்நீதி மன்றத்தில் தன் பெயரை பதிவுசெய்துகொண்டு இந்தியாவுக்கு கப்பல்மூலம் பயணம் மேற்கொண்டார். இந்தியா திரும்பியவர் பம்பாயில் வழக்கறிஞர் தொழிலை ஆரம்பித்தார். இயற்கையிலே கூச்ச சுபாவமுள்ளவராகவும் பொய்மையை வெறுப்பவராகவும் இருந்தமையால் வழக்கறிஞர் தொழிலில் இந்தியாவில் பிரகாசிக்க முடியவில்லை. "தாதா அப்துல்லாசேட்" என்பவருக்கு தென்னாபிரிக்காவில் உள்ள நீதிமன்ற வழங்கிற்கு 1893 மே மாதம் தென்னாபிரிக்கா சென்றார். 1896 நடுப்பகுதியில் கப்பல் மூலம் தாய்நாடு

2ம் பக்கம் பார்க்க



நினைவு தினம்
செப் - 08

## தோழர் பொன் கந்தையா

### வாழ்க்கைக் குறிப்புகள் :

கரவெட்டியில் கரணவாய் என்னும் கிராமத்தில் 1914.07.08 இல் பிறந்தார். கரணவாயில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றிலும் விக்கினேஸ்வரக் கல்லூரியிலும் ஆரம்பக்கல்வியைக் கற்றார். இடைநிலைக்கல்வியை யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும், சிரேஸ்டகல்வியை யா/ இந்துக் கல்லூரியிலும் கற்றார். யா/ இந்துக்கல்லூரியின் உபகார சம்பளம் பெற்று கொழும்பு பல்கலைக்கழக கல்லூரியில் கீழைத்தேய மொழிகளில் பட்டம் பெற்றார். பட்டப்படிப்பில் சிறப்புச்சித்தி பெற்றமையால் பல்கலைக்கழக உபகாரச் சம்பளம் பெற்று மேற்படிப்பிற்காக 1936 இல் இங்கிலாந்து சென்றார். அங்கு கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் இரண்டு வருடமும் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் ஒரு வருடமும் பயின்று M.A. பட்டமும் வேறு பட்டமும் பெற்றார். இங்கிலாந்தில் கல்விகற்ற காலத்தில் டாக்டர் S.A. விக்கிரமசிங்க பீட்டர் கெளமன், A.வைத்திலிங்கம், T.B.சுபசிங்க, வில்லியம் சில்வா போன்றோருடன் தொடர்புகள் ஏற்பட்டது. இங்கிலாந்தில் இயங்கிய 'இந்தியன்லீக்' இல் முன்னாள் இந்திய பாதுகாப்பு அமைச்சர் V.K.கிருஸ்ணமேனன் முன்னாள் வங்கமுதல்வர் ஜோதிபாசு என்போருடன் தொடர்பு ஏற்பட்டது. இவர்கள் அனைவரும் இங்கிலாந்து கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. 1940 இல் இவரும் இவரோடு சேர்ந்த பீற்றர் கெனமன், வைத்தியலிங்கம் போன்றோர் கம்யூனிஸ்டாக இலங்கை திரும்பினார்கள். 1940 இல் இலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளராக நியமனம் பெற்றார். இதே நேரம் இவர்கள் M.G.மென்டிஸ் தலைமையில் உள்ள இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தில் தீவிரமாக பங்கு கொண்டார்கள். தொழிற்சங்கத்தில் இணைந்து ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் செய்தமையால் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கப்பட்டார். 1943 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவராக இருந்தார். இரண்டாம் உலக யுத்த முடிவில் உதவி நூலகராக இலங்கை பல்கலைக்கழகத்தில் இணைந்தார். 1947இல் நடைபெற்ற இலங்கை பாராளுமன்ற தேர்தலில் பருத்தித்துறை தொகுதியில் போட்டியிட்டு தோல்வி கண்டார்.

1952 இல் உதவிநூலகர் பதவியை இராஜினாமா செய்து இரண்டாவது தடவையும் இதேதொகுதியில்

2ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாத்மா காந்தி தொடர்........

திரும்பினார். அதே ஆண்டு டிசம்பரில் மீண்டும் தனது இரண்டு மகனுடனும், சகோதரியின் மகனுடனும் தென்னாபிரிக்கா சென்றார். தென்னாபிரிக்காவில் உள்ள இந்தியர்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட வாக்குரிமை மறுப்புச் சட்டத்திற்கு எதிராக, அகிம்சை சத்தியம் இரண்டையும் ஆயுதமாகக் கொண்டு போராடினார். 1901 இல் தாயகம் திரும்பி கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய காங்கிரஸ் மாநாட்டில் தென்னாபிரிக்காவில் உள்ள இந்தியர்களுக்கு சார்பான தீர்மானங்கள் காந்தியால் முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. தென்னாபிரிக்காவில் நேட்டால் இந்திய காங்கிரஸ் என்னும் அமைப்பை உருவாக்கி 1906 செப்ரெம்பரில் யோஹன்ஸ்பேக்கில் சத்தியாக்கிரம போராட்டத்தை நடத்தினார். 1896 தொடக்கம் 1901ம் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட அன்பளிப்புக்கள் பொது அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

தென்னாபிரிக்காவில் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக 'இந்தியன் ஒப்பினியன்' என்னும் வார இதழை ஆரம்பித்தார். இப்போராட்டம் காரணமாக 1908 இல் யோஹன்ஸ்பேக்கில் கைதுசெய்யப்பட்டார்.

தென்னாபிரிக்காவிலிருந்து 1915ம் ஆண்டு மீண்டும் இந்தியா திரும்பினார். 1916ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி காசிப் பல்கலைக்கழகத்தில் சிறப்புரையாற்றி அனைவரதும் கவனத்தை தன்பால் ஈர்த்துக்கொண்டார்.

1920 செப்ரெம்பரில் நடைபெற்ற காங்கிரஸ் விசேட மாநாட்டில் இந்திய சுயராச்சியம் கோரிக்கை தீர்மானம் நீண்ட விவாதத்தின்பின் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1924 டிசம்பரில் கூடிய பெல்காம் காங்கிரசுக்கு தலைவராக காந்தி தெரிவுசெய்யப்பட்டார். 1924 இல் இந்து முஸ்லிம் ஐக்கியத்தை வேண்டி உண்ணாவிரதம் இருந்தார். 1927 நவம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தார். காலியில் உள்ள மகிந்தாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார். தாய்மொழி மூலம் கல்விகற்கும் உரிமையை வலியுறுத்திப் பேசினார். 1929 டிசம்பர் மாதம் 31ம் திகதி இந்தியாவுக்கு பூரண சுயராச்சியம் வேண்டி காந்தியின் முன்முயற்சியுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1930 ஏப்ரல் 12ம் திகதி தண்டி யாத்திரை செய்து அரசாங்க கட்டுப்பாட்டைமீறி உப்புச் சத்தியாக்கிரகம் செய்து கைதுசெய்யப்பட்டார்.

1931 மார்ச்சில் காந்திஜி காங்கிரசின் ஏகப் பிரதிநிதியாக இங்கிலாந்துக்கு இரண்டாவது வட்ட மேசை மாநாட்டுக்கு சென்றார். 1932 ஜனவரி மாதம் 4ம் திகதி தீண்டத்தகாதவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் தனித்தொகுதி ஒதுக்கும் பிரிட்டிசாரின் தீர்மானத்துக்கு எதிராக உண்ணாவிரத மிருந்தார்.

இதன் காரணமாக கைதுசெய்யப்பட்டு 'ஏர்வாடா' சிறையில் அடைக்கப்பட்டார். ஏர்வாடா சிறையில் இருந்த காலத்தில் தனது சுயசரிதையான "சத்தியசோதனை" என்ற நூலை எழுத ஆரம்பித்தார். இது நவஜீவன் என்ற பத்திரிகையில் தொடராக வந்தது.

காந்தியினுடைய அகிம்சை போராட்டத்தின் வலிமையினை எடுத்துக் கூறுமுகமாக அவரை இந்திய தேசிய மகாகவி ரவீந்திரநாத்தாகூர் அவர்களால் மகாத்மா என அழைக்கப்பட்டார்.

1933இல் தீண்டத்தகாதவர்களை ஹரிசன் என அழைத்து அவர்களின் வாழ்வை முன்னேற்றுவதற்காக ஹரிசன சேவைச்சங்கம் அமைத்தார். இந்நோக்கை நிறைவேற்று வதற்காக ஹரிசன் என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்.

3ம் பக்கம் பார்க்க

பொன் கந்தையா தொடர்........

போட்டியிட்டு தோல்வியை தழுவிக் கொண்டார். தேர்தலின் பின் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராக சிறப்பாக கடமையாற்றினார். 1956 இல் மீண்டும் பருத்தித்துறை தொகுதியில் போட்டியிட்டு 6000 வாக்கு வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றார். 1960 இல் பருத்தித்துறை தொகுதி உடுப்பிட்டி, பருத்தித்துறை என பிரிக்கப்பட்ட போது உடுப்பிட்டி தொகுதியில் நோயுற்று படுக்கையில் இருந்த நிலையிலும் போட்டியிட்டு 1900 வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற்றார். குறுகிய கால பாராளுமன்ற சேவையில் பல அரிய சேவைகளுக்கும் சாதனைகளுக்கும் உரியவரான பொன்கந்தையா 08.09.1960 இல் இயற்கை எய்தினார்.

பாராளுமன்ற விவாதங்களில் இவரினால் நிகழ்த்தப்பட்ட கீழ்காணும் உரைகள் சகலராலும் பாராட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1. சிம்மாசன பிரசங்கங்களில்
2. வரவுசெலவு திட்டங்களில்
3. மொழிச்சட்டத்தில்
4. பல்கலைக்கழக மறுசீரமைப்பில்
5. மகாவலிகங்கை திசை திருப்பல்
6. கொழும்பு நூலக ஆணைக்குழு

**கந்தையா கூறியவை,**

சரியானது எது என்பதை ஒருவன் காணாவிடில் அவன் குருடன் மட்டுமே. ஆனால் கண்டும் அதை மறுப்பவன் நேர்மையற்றவன் ஆகிறான். (பாராளுமன்றில் கூறினார்)

**பொன் கந்தையாவைப் பற்றிய சக அரசியல்வாதிகளின் கூற்று.**

மு.சிவசிதம்பரம் **M.P** உடுப்பிட்டி

"அசாதாரண கல்விமான் அவர் அறிவிலிகளை சகித்துக் கொண்டதுமில்லை எத்தர்களையும் புல்லுரிவிகளையும் ஆதரித்ததுமில்லை"

**S.J.V. செல்வநாயகம் சமஷ்டி கட்சித் தலைவர்.**

"He made valuable Contribution to onr debates. He always studied his subject and prepared his speeches."

**Dr.N.M.Perera** L.S.S.P. தலைவர்

'He was a convinced communist and he lived up to his convictions. It is a remarkable tribute to the character of the man, that knowing his days were numbered, he still persisted in his line of active political work. It was always a pleasure to listen to his well - thought out well - arranged arguments all directed towards a logical conclusion. Some of the best contributions of the house came from kandiah"

**Dr.S.A விக்கிரமசிங்க** இலங்கை கட்யூனிஸ்ட் கட்சித்தலைவர்.

"அரசியல் தன் வாழ்நாட்களைக் குறைக்குமென்று அறிந்திருந்தும் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளே முக்கியம் என எண்ணினார். அதற்காகத் தியாகத்திலெல்லாம். தலையாய தியாகத்தைச் செய்தார்."

**பீற்றர் கெளமன்** இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர்.

"கந்தையாவின் வாழ்க்கை மார்க்ஸிசம் லெனினிஸம் என்ற உன்னத லட்சியத்தோடு பின்னிப் பிணைந்திருந்தது. தீர்க்க முடியாத இருதயநோயால் அவதியுற்ற கடைசி நாட்களிலும் அவரது மனமும் எண்ணங்களும், அவரால் வெளியிட முடிந்த சக்தி அனைத்தும் கம்யூனிஸ்த்திற்கே அர்ப்பணிக்கப்பட்டன.

**Deu. Gunasekara** இலஙகை கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர்.

'He was a patriot as well as an Intemationalist"

3ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாத்மா காந்தி தொடர்........

இந்திய காங்கிரஸில் காந்தியின் மேலாதிக்கம் நிலவுவதாக உணரக்கூடாது என்பதற்காக 1934 செப்ரெம்பர் 18ம் நாள் காங்கிரசில் இருந்தும் நாலணா உறுப்பினராக இருப்பதிலிருந்தும் விலகினார். 1942 யூலை 14இல் 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தை ஆரம்பித்தார். 1944 பெப்ரவரி 22 இல் மனைவி கஸ்தூரிபாய் காலமாகினார். காந்தி கதர் உடையையே தானும் அணிந்து மக்களும் அணிய வேண்டுமென்று விரும்பியமையால் அவரது மனைவியும் கணவன் கையால் நூற்ற நூலினால் நெய்த புடவையை தனது உடலில் போர்த்தி தகனம் செய்யவேண்டும் என்ற இறுதி விருப்பத்தை தெரிவித்தார்.

1946 இல் வங்காளத்தில் உள்ள நவகாளியில் ஏற்பட்ட இந்து முஸ்லிம் கலவரத்தையடுத்து அங்கு சென்று அமைதியை ஏற்படுத்தினார். 1947 ஆகஸ்ட் 15இல் இந்தியா சுதந்திரம் அடைந்தது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இந்து முஸ்லிம் கலவரத்தால் மனம் வருந்திய காந்தி சாகும்வரை உண்ணாவிரதமிருந்தார். இதனைத் தொடர்ந்து 73 மணி நேரத்தில் அமைதி திரும்பியது; 1948 இல் டில்லியில் நடைபெற்ற இந்து முஸ்லிம் கலவம் தொடர்பாக ஜனவரி மாதம் 13ம் திகதி உண்ணாவிரதம் ஆரம்பித்தார். 1948 ஜனவரி 18ம் திகதி நண்பர் மௌலானா சாகிப் என்பாரிடமிருந்து ஒரு கப் ஆரஞ்சுப் பழச்சாறு அருந்தி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

அகிம்சை, சத்தியம் இரண்டையும் தனது தாரக மந்திரமாக ஏற்று அறவாழ்வு வாழ்ந்த மகாத்மா காந்தி R.S.S. அமைப்பின் தீவிரவாதியான நாதுராம் வினாயக கோட்சே என்பவனால் 1948 ஜனவரி 30ம் திகதி தியான மண்டபத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தியா சோகத்தில் மூழ்கியது.

**ஆதாரம் : சத்தியசோதனை**

இங்கிலாந்து சென்ற காந்தியைப்பற்றி வின்சன் சேச்சில் கூறியது :

"ஒரு காலத்து இன்னர்டெம்பின் வக்கீலும் ராஜதுரோக பைக்கிரியும் தமது அரை நிர்வாணத்துடன் வைஸ்ராய் மாளிகையில் படிகளில் ஏறிச்செல்வதும் சம அந்தஸ்துடன் சக்கரவர்த்தியின் பிரதிநிதியுடன் உடன்பாட்டிற்காக பேசுவதும் குமட்டலையும், கேவலத்தையும் உண்டாக்கும் காட்சியாகும்"

காந்தியத்தின் சாராம்சம் :

1. அறத்தை அடிப்படையாகக் கொண்டே அரசியல் இயங்குதல் வேண்டும்.
2. குறிக்கோள் தூய்மையுடையதாயிருக்க வேண்டும். அதுபோல் அதை அடையும் வழியும் தூய்மையுடைய தாயிருக்க வேண்டும்.
3. எண்ணிக்கையைக் காட்டிலும் தன்மைதான் முக்கியம். அதாவது, 'மனிதர்கள் எண்ணிக்கையில் அதிகமாக போராடியிருந்தபோதிலும், அவர்களிடம் மனிதப் பண்பு இல்லாவிட்டால் அவர்களால் என்ன பயன் என்று காந்தீயம் கேட்கிறது.
4. மனிதனுக்கு வாழ்க்கையில் எளிமையும், நோக்கத்தில் உயர்வும் இருக்கவேண்டும்.
5. தன்மீது வெற்றி கொள்கிறவனுக்கு உலகம் தானே வசப்பட்டுவிடுமென்ற உண்மையை ஒவ்வொரு மனிதனும் அறியக்கடவன்.
6. தேசத்தை நேசிப்பது மேலானதுதான். ஆனால் அதைக் காட்டிலும் மேலானது மானிட சமுதாயத்தை நேசிப்பது.

**வெ. சாமிநாத சர்மா** மஞ்சரியில்

பொன் கந்தையா தொடர்........

'Times of Ceylon 11th 1960'

"It was the last act of a man who had sacrificad academic honours and an assured carrier for the grim uncertainties of politics in the firm belief that any sacrifice was worth it for the betterment of his fellow men".

**பொன் கந்தையா தனிச்சிங்கள மசோதாவை எதிர்த்து பாராளுமன்றில் சொன்னவை.**

நான் இந்த மசோதாவை எதிர்க்கின்றேன். இந்த மசோதாவிற்கு நான் எதிர்ப்புத் தெரிவிப்பது தமிழன் என்ற ரீதியில் மட்டுமல்ல, தமிழன் என்ற அடிப்படையில், எனக்கு நேசமாக இருப்பவைகளை இது பறித்துவிடுகிறது என நான் கருதுகிறேன். எனது பண்டைய பெருமையை இந்த மசோதா மறுக்கிறது. எமது நிகழ்கால வாழ்வுக்கும் உலை வைக்கிறது. மாற்றம் எதுவுமின்றி இந்த படுபாதகமான மசோதா சர்க்கார் தஸ்தாவேஜிலேயே இருந்தால், எனது குழந்தைகளுக்கும், அவர்களின் சந்ததிகளுக்கும் இது நீதி வழங்காது. அவர்களுக்கு உரிமையும் தராது. இந்த மசோதாவின் மூலம், இந்த நாட்டின் நேர்மையான பிரஜைகளாய், சுதந்திரமாக வாழவும், ஜீவிதம் நடத்தவும் இந்த நாட்டுக்கு சொந்தமான தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை ஆட்சியினர் மறுக்கின்றனர். நாங்கள் வாழ்ந்த பெருமைகள் அத்தனையையும், நாங்கள் அருமையாக வாழ்வதையும், சிறப்புற எதிர்காலத்தில் நாங்கள் வாழ எண்ணி இருப்பதற்கும் சாவுமணி அடித்து, எங்கள் உரிமைகள் அத்தனையையுமே இந்த மசோதா தட்டிக்கொண்டு போய்விடுகிறது.

இந்த அரசாங்கமோ அல்லது வேறு எந்த அரசாங்கமோ, உலகத்திலுள்ள படுபாதகர்கள் கூட என்னை போஷித்த தந்தையுடன், என்னைப் பெற்றெடுத்து பாலூட்டி தாலாட்டிய என் அன்னையுடன் தாய்மொழியாம் தமிழில் நான் பேசுவதை தடுக்கமுடியாது. உதயகால புளகாங்கிதத்தையும், ஆனந்தப் பேருவகையையும், துன்பச் சுழலையும் தாங்கித்தேற என் மனைவி, எனது குழந்தைகளுக்கும், அன்னை மொழியாம் தமிழில் மொழி அமுதூட்டுவதை எந்த சக்தியாலும் தடை செய்யமுடியாது. எனக்குச் சொந்தமான மொழியை நான் பாவிப்பதை எவராலும், ஆயிரம் சட்டங்களாலும் நிறுத்த முடியாது. இந்த உரிமையில் இன்று தகராறில்லை. இன்றுள்ள தகராறு, அரசாங்க நிர்வாகத்திலும், வர்த்தகப் பரிவர்த்தனையிலும் இந்த நாட்டின் பிரஜையென்ற காரணத்தால் என் தாய்மொழியை உபயோகிக்க எனக்குள்ள உரிமை இங்கு மறுக்கப்பட்டிருக்கிறது. எனது மொழிக்கு உரிமை மறுப்பது மூலம், தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்தவன் என்ற ரீதியில் எனக்குள்ள, எனக்கிருக்க வேண்டிய எல்லாவற்றிற்குமே நீங்கள் சாவுமணி அடிக்கிறீர்கள். உங்கள் சிந்தனையின் வேகம் உங்கள் புத்திக் கூர்மையின் முடிவு இந்த தீர்மானத்தை எனக்கு முன்னும், என் மக்கள் முன்பும் வைத்திருக்கிறது. நாங்கள் எங்கள் வாழ்வை 'வாழி' பாடி விட வேண்டும். இந்த நாட்டில் நாங்கள் இருப்பதே இல்லாமல் ஒழிந்து போகவேண்டும். இது தான் உங்கள் முடிவு. நீதியின் நாமம் கொண்டு. நேர்மையான காரணம் கொண்டு எங்களை அழிக்க உங்களுக்கு உரிமையில்லை. உங்களிடமுள்ள உயர்தர ஆயுதங்களைக் கொண்டு, சக்தியைக் கொண்டு என்னைச் சேர்ந்த மக்களை இந்த மாண்புமிக்க நாட்டிலிருந்து தொலைத்துக்கட்ட நீங்கள் முயற்சிக்கிறீர்கள். உயிருக்குயிரான, ஜீவியத்தின் ஜீவனான மொழியை பறிக்கப் பார்க்கும் சக்திகளை எந்த நாட்டு மக்களும், எளிமைப்பட்டவர்களும் கூட ஏற்கமாட்டார்கள்.

ஆதாரம் ***பொன் கந்தையா***
நினைவுமலர் வெளியீடு 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் - கரவெட்டி

## 1994 - 1995 நிதியாண்டு தொடக்கம் 1997 - 1998 நிதியாண்டு

### காலப்பகுதிக்குரிய பணிப்பாளர்கள்

**01.06.1994 - 31.05.1995 நிதியாண்டு** — 09.04.1995 இல் தேர்தல்

| | | | |
|---|---|---|---|
| திரு. ம. ஜெகநாதன் | தலைவர் | 09.04.1995 வரை | சண்டில் |
| திரு. மு. செல்லத்தம்பி | உபதலைவர் | 09.04.1995 வரை | கிழவிதோட்டம் |
| திரு. ம. ஜெகநாதன் | இயக்குனர் | தொடர்ந்து | சண்டில் |
| திரு. பா. தவயோகம் | இயக்குனர் | 09.04.1995 வரை | கோவிற்கடவை |
| திரு. க. தருமலிங்கம் | இயக்குனர் | 09.04.1995 வரை | கரவெட்டி மேற்கு |
| திரு. க. புலேந்திரன் | இயக்குனர் | 09.04.1995 வரை | அல். தெற். மத்தி |
| திரு. அ. ஈஸ்வரதேவன் | இயக்குனர் | 09.04.1995 வரை | சந்திரா |
| திரு. தா. வீரசிங்கம் | இயக்குனர் | 09.04.1995 வரை | அல். தெற்கு B |
| திரு. மு. ஸ்ரீஸ்கந்தராசா | தலைவர் | 09.04.1995 இலிருந்து | துன். வடக்கு ட |
| திரு. ஐ. சிவஞானம் | உபதலைவர் | 09.04.1995 இலிருந்து | கர. மேற்கு |
| திரு. வ. சிவஞானம் | இயக்குனர் | 09.04.1995 இலிருந்து | இராசகிராமம் |
| திரு. இ. திருக்குமரன் | இயக்குனர் | 09.04.1995 இலிருந்து | கல்வத்தை |
| திரு. பொ. சிவலிங்கம் | இயக்குனர் | 09.04.1995 இலிருந்து | துன்.தெற்கு |
| திரு. கி. விஜயகுமாரன் | இயக்குனர் | 09.04.1995 இலிருந்து | கர. மேற்கு |

**01.06.1995 - 31.05.1996 நிதியாண்டு**

| | | | |
|---|---|---|---|
| திரு. மு. ஸ்ரீஸ்கந்தராசா | தலைவர் | 17.09.1995 வரை | துன். வடக்கு B |
| திரு. மு. ஸ்ரீஸ்கந்தராசா | இயக்குனர் | தொடர்ந்து | துன். வடக்கு B |
| திரு. ஐ. சிவஞானம் | உபதலைவர் | 17.09.1995 தொடர்ந்து | கர. மேற்கு |
| திரு. ம. ஜெகநாதன் | தலைவர் | 17.09.1995 இலிருந்து | சண்டில் |
| திரு. வ. சிவஞானம் | இயக்குனர் | தொடர்ந்து | இராசகிராமம் |
| திரு. இ. திருக்குமரன் | இயக்குனர் | தொடர்ந்து | கல்வத்தை |
| திரு. பொ. சிவலிங்கம் | இயக்குனர் | தொடர்ந்து | துன். தெற்கு |
| திரு. கி. விஜயகுமாரன் | இயக்குனர் | தொடர்ந்து | கர. மேற்கு |
| திரு. பா. தவயோகம் | இயக்குனர் | நியமனம் 17.09.1995 இலிருந்து | |
| திரு. ந. சின்னத்துரை | இயக்குனர் | நியமனம் 17.09.1995 இலிருந்து | |
| திரு. சி. பாலசிங்கம் | இயக்குனர் | நியமனம் 17.09.1995 இலிருந்து | |

**01.06.1996 - 31.05.1997 நிதியாண்டு** — 25.08.1996 இல் தேர்தல்

| | | | |
|---|---|---|---|
| திரு. ஐ. சிவஞானம் | உபதலைவர் | தொடர்ந்து | கரவெட்டி மேற்கு |
| திரு. மு. ஸ்ரீஸ்கந்தராசா | இயக்குனர் | தொடர்ந்து | துன். வடக்கு B |
| திரு. வ. சிவஞானம் | இயக்குனர் | தொடர்ந்து | இராசகிராமம் |
| திரு. இ. திருக்குமரன் | இயக்குனர் | தொடர்ந்து | கல்வத்தை |
| திரு. ந. சின்னத்துரை | இயக்குனர் | நியமனம் 17.09.1996 வரை | |
| திரு. பா. தவயோகம் | இயக்குனர் | நியமனம் 17.09.1996 வரை | |
| திரு. சி. பாலசிங்கம் | இயக்குனர் | நியமனம் 17.09.1996 வரை | |
| திரு. ச. செவ்வந்திநாதன் | தலைவர் | 25.08.1996 இலிருந்து | கனுவில் |
| திரு. ஆ. சண்முகம் | உபதலைவர் | 25.08.1996 இலிருந்து | நுகவில் |
| சி. சிதம்பரநாதன் | இயக்குனர் | 25.08.1996 இலிருந்து | கட்டைவேலி |
| திரு. க. எதிர்வீரசிங்கம் | இயக்குனர் | 25.08.1996 இலிருந்து | டைமன் |
| திரு. மு. கதிரவேற்பிள்ளை | இயக்குனர் | 25.08.1996 இலிருந்து | கல்வத்தை |
| திரு. செ. சுப்பிரமணியம் | இயக்குனர் | 25.08.1996 இலிருந்து | துன். தெற்கு |

**01.06.1997 - 31.05.1998 நிதியாண்டு**

| | | | |
|---|---|---|---|
| திரு. ச. செவ்வந்திநாதன் | தலைவர் | தொடர்ந்து | கனுவில் |
| திரு. ஆ. சண்முகம் | உபதலைவர் | தொடர்ந்து | நுகவில் |
| திரு. சி. சிதம்பரநாதன் | இயக்குனர் | தொடர்ந்து | கட்டைவேலி |
| திரு. க. எதிர்வீரசிங்கம் | இயக்குனர் | தொடர்ந்து | டைமன் |
| திரு. மு. கதிரவேற்பிள்ளை | இயக்குனர் | 29.11.1997 வரை இராஜினமா | கல்வத்தை |
| திரு. செ. சுப்பிரமணியம் | இயக்குனர் | தொடர்ந்து | துன். தெற்கு |
| திரு. மு. ஸ்ரீஸ்கந்தராசா | இயக்குனர் | தொடர்ந்து | துன். மத்தி |
| திரு. சி. இளையதம்பி | இயக்குனர் | 29.11.1997 இலிருந்து | கரவெட்டி மேற்கு |

**பு. இராதாகிருஷ்ணன்**
செயலாளர்

இச்செய்தி கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தால் நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் நிதி

**ரூபா 5000/=மும் அதற்கு மேற்பட செலுத்தியோர் விபரம் யூலை 2007 செய்தியில் வெளியானது**

01. 01 - 39 பேர் 235000.00

**ரூபா 2000/= தொடக்கம் 5000/= வரையிலான விபரம் செப்ரெம்பர் 2007 செய்தி 4 இல் வெளியானது**

02. 40 - 95 பேர் 125083.00

**யூலை 2007 சங்கம் செய்தியின் பின் புலமைப்பரிசில் ரூபா 2000/= க்கு மேல் அன்பளிப்பு செய்தோர்**

| | |
|---|---|
| 96வது கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கப் பணியாளர் | 14350.00 |
| 97வது சரவணமுத்து நவராசா புதுறோட், கரவெட்டி மேற்கு | 5000.00 |
| 98வது தெய்வகடாட்சம் நேசதாசன் துன்னாலை | 5000.00 |
| 99வது S. சிறீகரன் ஸ்ரீஸ்தான், துன்னாலை, கரவெட்டி. | 5000.00 |
| 100வது சரவணமுத்து நவராசா புதுரோட், கரவெட்டி மேற்கு. | 2000.00 |
| 101வது க. புஸ்பராசா - கரணவாய் | 2000.00 |
| 96 - 101 பேர் | 33350.00 |

**புலமைப்பரிசில் நிதி 1000/= க்கும் 2000/= க்கும் உட்பட்டோர் விபரம்**

| | | |
|---|---|---|
| 102. சி. வேலாயுதம் கிழவிதோட்டம் | 1600.00 | |
| 103. து. புவனேஸ்வரன் சுன்னாகம் | 1500.00 | |
| 104. வ. பத்தினிப்பிள்ளை துன்னாலை | 1500.00 | |
| 105. ந. பார்த்தீபன் முடக்காடு | 1350.00 | |
| 106. சி. கணேசலிங்கம் வல்வெட்டித்துறை | 1200.00 | |
| 107. ந. சிறீதரன் துன்னாலை | 1138.60 | |
| 108. க. கணபதிப்பிள்ளை முடக்காடு | 1050.00 | |
| 102 - 108 பேர் | | 9338.60 |
| இதுவரை விபரம் தரப்பட்ட தொகை | | 402771.60 |

**வே. கார்த்திகேசு**
புலமைப்பரிசில் அன்பளிப்பு பெறுநர்

## நன்றியையும் கடமைப்பாட்டையும் தெரிவிக்கின்றோம்

1. கௌரவ தி. மகேஸ்வரன் முன்னாள் யாழ். மாவட்ட பா.உ.உம் தற்போதைய கொழும்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரதும் 2004 ஆம் ஆண்டு சிபார்சில்
   i. கூட்டுறவு திணைக்களத்தினால் கணனி ஒன்று 125000.00
   ii. கூட்டுறவு அபிவிருத்தி நிதி 1000000.00
2. கௌரவ கி. சிவநேசன் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் சிபார்சில்
   பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2006 இல் கலாசார கூட்டுறவு பெருமன்ற நூல் நிலைய அபிவிருத்தி முயற்சிக்கு ரூபா 100000.00
3. திரு. ந. பாஸ்கரன் தையல்மெசின் இலகுகடன் வழங்கு வதற்கு ரூபா 115000.00 (2002ம் ஆண்டு)
4. பட்டயக்கணக்காளர் திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை கால்நடை வளர்ப்போர் கடன் வழங்க ரூபா 50000.00 (2003ம் ஆண்டு)
5. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் U.N.D.P இலகு கடன் வழங்க
   i. ரூபா 1000000.00 (1999ம் ஆண்டு)
   ii. கணனி இயந்திரம் ஒன்று 125000.00
   பயனாளிகளுக்கு இலகு கடன் அடிப்படையில் சங்கத்தினூடாக கடன் வழங்குவதற்கு நிதி வழங்கிய நிறுவனங்கள். இந்நிதிகள் உரிய பயன்பாட்டின் பின்னர் செலுத்தப்பட்டது.
6. போருட் (Forut) 2000 ஆம் ஆண்டு - 750000.00
   2001 ஆம் ஆண்டு - 1000000.00
7. தேசிய நம்பிக்கை நிதிய சபை
   2004 ஆம் ஆண்டு - 500000.00
8. புலமைப்பரிசில் நிதிக்கு பணம் வழங்கிய நலன்விரும்பி கள் விபரம் யூலை 2007 சங்கம் செய்தியிலிருந்து தொடர்ந்து வெளிவருகிறது. தொகை 1350865.00

பணிப்பாளர் சபை

### *கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க காணி கட்டிட உத்தேச பெறுமதி விபரம் 30.06.2007 இல் உள்ளபடி*

| | சொத்தின் தன்மை | உரிமை கிடைக்கப் பெற்ற வழிமுறை | காணி கட்டிட அளவு | சொத்தின் உத்தேச பெறுமதி |
|---|---|---|---|---|
| 1. | சங்க காணியும் கட்டிடமும் (தலைமைக் காரியாலயம், களஞ்சியம், மக்கள்வங்கி வாடகை கட்டிடம்) | கொள்வனவு | $3.6\frac{22}{33}$ பரப்பு | 20000000 |
| 2. | அம்பம் காணியும், கட்டிடமும் (பழைய காரியாலயமும் இரும்பு நிலையம், பழைய களஞ்சியம், வெதுப்பகம், வாகன தரிப்பிடம்) | புனரமைப்பின் மூலம் | 6 பரப்பு | 7500000 |
| 3. | கட்டைவேலி கிளை காணி கட்டிடமும், களஞ்சியமும் | புனரமைப்பின் மூலம் | 3.11¾ பரப்பு | 1000000 |
| 4. | வதிரி அம்மன் கிளைக் காணியும், கட்டிடமும், களஞ்சியமும் | புனரமைப்பின் மூலம் | 2½ பரப்பு | 1500000 |
| 5. | வல்லியானந்தம் காணியும், கட்டிடமும் பாலர்பாடசாலை கட்டிடமும் | புனரமைப்பின் மூலம் | 3 பரப்பு | 2000000 |
| 6. | குடவத்தை காணியும், கட்டிடமும், உரக்களஞ்சியமும் | கொள்வனவு | $3\frac{25}{32}$ பரப்பு | 1500000 |
| 7. | நுகவில் கிளை கவுடாலை காணி கட்டிடமும் | கொள்வனவு | $5\frac{30}{32}$ குளி | 50000 |
| 8. | சந்திரா காணி குமரிச்சியொல்லை | கொள்வனவு | 13.5 குளி | 50000 |
| 9. | வட்டுவத்தை காணி | கொள்வனவு | 1 பரப்பு | 50000 |
| 10. | எரிபொருள் நிலையம் காணி கட்டிடம் | சுவீகரிப்பு | 1 பரப்பு | 1000000 |

– பொதுமுகாமையாளர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைவேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் - கரவெட்டி.

## நினைவுதின கூட்டம்

முன்னாள் பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் கம்யூனிஸ்டும் ஆகிய தோழர் பொன் கந்தையா அவர்களினதும், முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சிறந்த கூட்டுறவாளருமான சி. சிவமகாராசா அவர்களினதும் நினைவுதினம்.

மேற்படி நிகழ்வு சங்கத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் அவர்களின் தலைமையில் 08.09.2007 இல் சங்க மண்டபத்தில் 2 நிமிட மௌனப்பிரார்த்தனையுடன் ஆரம்பமாகி நடைபெற்றது. தலைவர் தனது உரையில் இருவரினது சேவை, கொள்கைப்பிடிப்பு, தியாகமனப்பான்மை என்பன பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். தோழர் பொன் கந்தையா அவர்கள் பற்றி யா/ மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் திரு. இ. இராகவன் அவர்களும், திரு. செ. சதானந்தன் இளைப்பாறிய அதிபர் அவர்களும் நினைவுரை வழங்கினார்கள். அமரர் சி. சிவமகாராசா அவர்கள் பற்றி சங்க உபதலைவர் திரு.சி.வீரசிங்கம் அவர்களும் சங்க மகளிர் குழுத்தலைவி திருமதி. வ.பத்தினிப்பிள்ளை ஆசிரியை அவர்களும் நினைவுரை வழங்கினார்கள். சங்கப் பொதுமுகாமையாளரின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிது முடிவுற்றது.

சி. மாயவன்.
கல்வி உத்தியோகத்தர்

### மனிதனின் உண்மையான உறவினர்கள் - 6

- ❖ சத்யம் - தாய்
- ❖ ஞானம் - தந்தை
- ❖ தர்மம் - சகோதரர்
- ❖ இரக்கம் - நண்பன்
- ❖ சாந்தம் - பத்தினி (மனைவி)
- ❖ மன்னிக்கும் மனப்பான்மை - புத்திரர்கள்

### உலக ஏழு அதிசயங்கள்

- ❖ தாஜ்மஹால் - இந்தியா
- ❖ சிசன் இட்சாபிரமிட் - மெச்சிக்கோ
- ❖ ரெடிமர் ஏசு சிலை - பிறேசில்
- ❖ சீனப்பெருஞ்சுவர் - சீனா
- ❖ மெசிபிட்சு - பெரு
- ❖ பெத்ரா - ஜோர்டான்
- ❖ றோமன் கொலேசியம் - இத்தாலி

## அஞ்சலி செலுத்துகின்றோம்

## அமரர் வேலுப்பிள்ளை நேசரட்ணம்

கட்டைவேலி கிளைக்குழு உறுப்பினரும்
யா/ ஞானாசாரியார் கல்லூரி உப அதிபரும்

### கட்டவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் - கரவெட்டி
### செயற்பாடு ஆகஸ்ட் - 2007 அறிக்கை

| | | |
|---|---|---|
| 1.0. | நுகர்ச்சிப்பகுதி | |
| 1.1. | விற்பனை ரூபா | **24308417.00** |
| | காசு விற்பனை | 16938809.00 |
| | கடன் விற்பனை | 4489680.00 |
| | நிவாரண விநியோகம் | 1391764.00 |
| | மாற்றம் வெளி | 1488164.00 |
| 1.2 | இறுதி இருப்பு | 25027069.00 |
| 1.3 | மொத்த இலாபம் | **1118246.00** |
| | மொத்த இலாப வீதம் | 4.6 |
| 1.4 | நானாவித வருமானம் | 27160.00 |
| 1.5 | மொத்த வருமானம் | **1145406.00** |
| 1.6 | மொத்த செலவு | **887874.00** |
| | பணியாளர் கொடுப்பனவு | 634597.00 |
| | வங்கிக் கட்டணமும் வட்டியும் | 153830.00 |
| | ஏனைய செலவு | 99447.00 |
| | சுத்த இலாபம் | **257532.00** |
| 2.0 | பகுதிகளின் செயற்பாடு | |
| 2.1 | இலாபத்தில் இயங்கிய பகுதிகள் | **321352.00** |
| | எரிபொருள் நிலையம் | 67369.00 |
| | பிரதான வீதி தேனீர்ச்சாலை | 13943.00 |
| | நெ.ம.ம.வி.தேனீர்சாலை | 4311.00 |
| | வடமராட்சி மகளிர் தேனீர்ச்சாலை | 440.00 |
| | கிராமிய வங்கி | 180905.00 |
| | வாகன பகுதி | 42200.00 |
| | கணனி | 5833.00 |
| | போட்டோப்பிரதி | 73.00 |
| | பொதி செய் நிலையம் | 4030.00 |
| | வாடகை சேவை | 2248.00 |
| 2.2 | நட்டத்தில் இயங்கிய பகுதிகள் | **12335.00** |
| | தொலைத்தொடர்பு | 6996.00 |
| | தட்டச்சு | 5339.00 |
| 2.3 | பகுதிகளின் தேறிய இலாபம் | **309017.00** |
| 0.3 | பொது இலாப நட்டக் கணக்க | |
| | நுகர்ச்சிப் பகுதி இலாபம் | 257532.00 |
| | பகுதிகளின் தேறிய இலாபம் | 309017.00 |
| | நிர்வாக பகுதி வருமானம் | 140836.00 |
| | திரட்டிய வருமானம் | 707385.00 |
| | திரட்டிய செலவு | 625904.00 |
| | சுத்த இலாபம் | **81481.00** |

**சி. நேசராசா**
அகக்கணக்காய்வாளர்.

### கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்
### பாராட்டி வாழ்த்துகிறது.

*யாழ்ப்பாணம் அல்வாய் தெற்கைச் சேர்ந்த செல்வி அபிராமி வன்னியகுலம் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா முன்னிலையில் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.*

*செல்வி. அபிராமி, கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் சட்டமாணி பட்டதாரியாவார். இவர் இலங்கை ரூபவாஹினி தேசிய தொலைக்காட்சி தமிழ்ப்பிரிவின் முன்னைநாள் பணிப்பாளரும் வீரகேசரியின் முன்னாள் சிரேஸ்ட செய்தி ஆசிரியருமான சி. வன்னியகுலம், இலங்கை திட்ட அமுலாக்கல் அமைச்சின் முன்னாள் பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி. பர்வதாமணி வன்னியகுலம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியுமாவார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org